234—

இலங்கை அகதிகளுக்கு அரசின் செலவு விவரம்

*42141—**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இலங்கை அகதிகள் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு அரசு செலவு செய்யும் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 30-11-94-ம் தேதிய நிலவரப்படி 9 சாதாரண முகாம்களில் 1084 குடும்பங்களைச் சேர்ந்த 4233 இலங்கைத் தமிழ் அகதிகளும், வேலூர் கோட்டையில் உள்ள திப்பு மகால் சிறப்பு முகாமில் 108 தனி நபர் இலங்கைத் தமிழ் அகதிகளும், ஹைதர் மகால் சிறப்பு முகாமில் 97 குடும்பங்களைச் சேர்ந்த 396 இலங்கைத் தமிழ் அகதிகளும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(ஆ)	1. சாதாரண முகாம்	..	ரூ.	6,77,858.00
	2. சிறப்பு முகாம்	..	ரூ.	1,09,891.00
	மொத்தம்	..	**ரூ.**	**7,87,749.00**

மொத்தச் செலவினமும் முதலில் மாநில அரசால் செலவு செய்யப்படுகிறது. பின்னர் முழுச் செலவும் மைய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

முற்பகல் 10-55

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 4 ஆண்டுக் காலத்திலே, இந்தியாவிலே எந்த முதலமைச்சரும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளைப் படைத்துவரும் புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இலங்கை அகதிகள் அடிக்கடி போராட்டம் நடத்துவதோடு தவறான பணிகளில் ஈடுபட்டும் வருகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அடிக்கடி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. எனவே அவர்களை வெளியேற்றி சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை சொந்த நாட்டுக்கு அனுப்புகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஏதாவது பிரச்சினை எழுமானால் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரச்சினையை சுமுகமாக முடிக்கின்ற பணியைச் செய்து வேறு எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அகதிகளுக்கு நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு செய்யும் செலவுத் தொகைக்கு மத்திய அரசால் ஏதாவது மானியம் கொடுக்கப்படுகிறதா? அப்படியென்றால் அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் செலவிடப்படுகின்ற மொத்தச் செலவினமும் முதலில் மாநில அரசால் செலவு செய்யப்படுகிறது. பின்னர் முழுத் தொகையும் மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *235*, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

235—

பரமத்தி-வேலூர் வட்டத்தில் பெண்கள் கல்லூரி அமைத்தல்

33410*—திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பரமத்தி-வேலூர் வட்டத்தில் புதியதாக பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.